## நேரடி ஜனநாயகத்தை நோக்கி ஓர் மைல்கல்

# பஞ்சாயத்து பேரவை - கொள்கை, அமைப்பு மற்றும் செயல்படும் முறை

### 1. அறிமுகம்:

உண்மையான மக்களாட்சி, அதிக அளவு மக்களை அரசின் நிர்வாகத்தில் பங்கெடுக்கச்செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் தான் அடங்கியிருக்கிறது. அந்த வகையில், நமது தேசத்தில் நிர்வாகம் செய்யும் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை முழுமையாக வாக்காளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நமது நாட்டின் சட்டத்திட்டங்களை இயற்றி, வளர்ச்சியை வழி நடத்தி செல்லும் பொறுப்புப்பானது இந்தியா முழுவதுமுள்ள 4,700க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ மற்றும் எம்.பி.க்களிடம் தரப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள மாநில அரசளவில் சட்டசபையும் மத்திய அரசளவில் பாராளுமன்றமும், அரசியலமைப்பின் முழுமையான இறையாண்மை பெற்று உயரிய அங்கீகாரத்துடன் செயல்பட்டு வருகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனாலும் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடைய நமது தேசத்தின் நலனை முடிவுசெய்யும் அதிகாரம் வெறும் 4700 பேரிடம் மட்டும் இருப்பதென்பது இலட்சிய நிலையாக இருக்க முடியாது.

மாறிவரும் பிரபஞ்ச சூழலில், உலக நாடுகளை விஞ்சும்வண்ணம் நாம் முன்னேற அசாத்திய வளர்ச்சி தேவைப்படுகிறது. வளர்ச்சி என்பது ஆக்கப்பூர்வஅரசியலை அச்சாணியாக கொண்டது. ஆக்கப்பூர்வ அரசியல் பற்றிய சிந்தனைத்தளம் பரவலாக்கப்படும் போதுதான் வளர்ச்சியும் அர்த்தமுள்ளதாக வாய்க்கும். அந்த வகையில், இந்தியா முழுவதிலுமுள்ள எல்லா பஞ்சாயத்துக்களிலும் தனித்தனி பேரவைகள், அந்தந்த பஞ்சாயத்திற்கான பாராளுமன்றம் போல் செயல்பட்டால் எப்படியிருக்கும்? தமிழ் நாட்டில் உள்ள 234 எம்.எல்.ஏக்களின் பணியினை 12618 பஞ்சாயத்துக்களில், ஒரு பஞ்சாயத்திற்கு 100 பேர் வீதம் ஏறக்குறைய 12 லட்சம் பேர் ஆக்கப்பூர்வ அரசியல் சிந்தனையுடன் வளர்ச்சி பணியாற்றும்போது உண்மையான அதிகாரப்பரவல் சாத்தியபடுமல்லவா?

இந்த சிந்தனையின் அடிப்படையில் பரிட்சார்த்தமாக எழுந்ததுதான் பஞ்சாயத்து பேரவை என்ற பரீட்சார்த்த அமைப்பு. இவ்வமைப்பானது பஞ்சாயத்துச் சட்ட வடிவம் பெறாத ஒன்று தானெனினும், மக்களிடத்தே நல்ல ஜனநாயக நடைமுறைகளை பழக்கபடுத்துவதற்க்காக பரீட்சித்துப்பார்க்கக் கூடிய நல்ல நிகழ்வாகும். இதில் அனைத்துத்தரப்பினரும் மனப்பூர்வமான பங்களிப்பை நல்குதல் நன்று. "அடித்தள மக்களிடத்தே சமூக சிந்தனை மற்றும் வளர்ச்சி பற்றி புரிதலை ஆழப்படுத்தி மக்களாட்சி தத்துவத்தின் மாண்பினை பரவலாக்குதல்" என்ற குறிக்கோளுடன் இத்தகைய அமைப்பு செயல்படும். முதற்கட்டமாக மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நாகை ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு பஞ்சாயத்தில் தானம் அறக்கட்டளையின் வழிகாட்டுதலுடன் பரிட்சார்த்தமாக இப்பஞ்சாயத்து பேரவை நடத்தப்பட்டது. அதன் மூலம் கிடைத்த அனுபவமும் உற்சாகமும் "பஞ்சாயத்து பேரவை" அமைப்பினை அடுத்த நிலையில் மேலும் அதிகமான பஞ்சாயத்துக்களில் அறிமுகப்படுத்தி பஞ்சாயத்து நிர்வாகத்தின் திறனை வலுகூட்டும் எண்ணம் உறுதிபட்டது.

### 2. பஞ்சாயத்து பேரவையின் அமைப்பு:

இந்திய தேசத்தின் பிரதான நிர்வாக அமைப்புகளான சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத்தில், 1. **ஆளும் கட்சி** - தேசத்தை நிர்வாகம் செய்யும் பொறுப்பில் உள்ளவர்கள், 2. **எதிர்கட்சி** - தேச நிர்வாகத்தை, வளர்ச்சிபோக்கை கண்காணித்து ஆளும் அரசுக்கு ஆலோசனை கூறுபவர், 3. **சபாநாயகர்** - நடுநிலை தன்மையுடன் பேரவையை வழிநடத்திச் செல்லும் பொறுப்புடையவர் - ஆகிய மூன்று முக்கிய கூறுகளை காணமுடியும். இதே போன்று பஞ்சாயத்து அளவில் இந்த உத்தேச பேரவையில் ஆளும்கட்சியின் பொறுப்பில், நிர்வாகக்குழுவும் எதிர்கட்சியின் பொறுப்பில் மக்கள் குழுவும் பஞ்சாயத்து பேரவையில் செயல்படும்.

***1. நிர்வாக குழு:***

இந்த வரிசையில் பஞ்சாயத்தளவில் பஞ்சாயத்து தலைவர், வார்டு உறுப்பினர்கள் அந்த பஞ்சாயத்திற்கான ஒன்றிய கவுன்சிலர் மற்றும் பஞ்சாயத்து பணிக்குழு உறுப்பினர்கள் அடங்குவர்

***2. மக்கள் குழு:***

இந்த வரிசையில் கிராம சபையில் உறுப்பினராக உள்ள சமூக அக்கறை கொண்டவர்கள், சுயஉதவிக்குழு பொறுப்பாளர்கள், பஞ்சாயத்து வளர்ச்சிகுழு போன்ற உள்ளூர் குழுக்களில் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள், ஊரில் உள்ள பாரம்பரியத்தலைவர்கள் அவ்வூரில் பணி செய்யக்கூடிய அடித்தள அரசு பணியாளர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்கலாம். அவ்வரிசையில் 25/50 பேர் வரை பங்கெடுக்க வாய்ப்பு கொடுக்கலாம்

***3. சபாநாயகர்:***

பஞ்சாயத்திற்கு பொதுவான, நல்அனுபவமிக்க ஊரின் அனைத்து தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவர் சபாநாயகராக தேர்வு செய்யப்படலாம். சபாநாயகரை தேர்வு செய்யும் பொறுப்பு நிர்வாக குழு மற்றும் மக்கள் குழுவை சேர்ந்தது. குறிப்பாக நல்லெண்ணம் கொண்ட பராம்பரிய தலைவர்கள், தெளிவான பஞ்சாயத்து உறுப்பினர்கள், படித்த மற்றும் அனுபவமுள்ள சான்றோர்கள் கிராம வளர்ச்சிக்காக தன்னலமின்றி உழைத்தவர் ஆகியோர்களில் பொருத்தமான ஒருவரை சபாநாயகராக தேர்ந்தெடுத்தல் சிறப்பு!

### 3. கூட்டம் நடைபெறும் நாட்கள்:

பஞ்சாயத்து பேரவை என்ற அமைப்பு **நிரந்தர அமைப்பாக** செயல்படும். முதற்கட்டமாக இத்தகைய கூட்டம் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு நாள் கூடி விவாதிக்கும். காலப்போக்கில் தேவையைப் பொறுத்து நாட்களையும் அமர்வுகளையும் அதிகரித்துக் கொள்ளலாம். கூட்டம் நடைபெறும் நாள், பேசப்படவுள்ள கருத்துக்கள் ஆகியவற்றை சபாநாயகர் முடிவு செய்து அவற்றை பொது மக்களுக்கு தெரியபடுத்தி கூட்ட நடவடிக்கைகளை மக்களாட்சி மாண்புடன் நிகழ்த்தல் அவசியம்.

### 4. பஞ்சாயத்து பேரவையின் பணிகள்:

அடிப்படையில் இத்தகைய பஞ்சாயத்து பேரவையானது, பஞ்சாயத்தின் வளர்ச்சி பற்றி ஆக்கப்பூர்வ விவாதங்கள், திட்டச்செயல்பாடுகள் பற்றிய புரிதல் ஏற்படுத்தவும், பஞ்சாயத்து மன்றத்தின் செயல்பாடுகளில் வெளிப்படையான தன்மையை உறுதி செய்யவும், மக்கள் பஞ்சாயத்து நிர்வாகம் தொடர்பான விழிப்புணர்ச்சி பெறவும் பயன்படுத்த வேண்டும். இந்த அமைப்பில் விவாத பொருளாக பஞ்சாயத்தின் வளர்ச்சி திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்தல், வளர்ச்சி பணிகளை ஆய்வு செய்தல், புதிய திட்டங்களை தொடங்குதல் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் பயன்பாட்டை ஆய்வு செய்தல் போன்ற கருத்துக்கள் எடுத்துக் கொள்ளலாம்

### 5. கிராம சபைக்கும் பஞ்சாயத்து பேரவைக்கும் உள்ள தொடர்பு:

பஞ்சாயத்து பேரவை என்பது கிராமசபையின் செயல்பாடுகளுக்கு வலு சேர்ப்பதற்கு துணை புரியும் உன்னத அமைப்பாக விளங்கும். கிராமசபை என்பது ஒரு பஞ்சாயத்தின் அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய மகா சபை. சுமார் 1000லிருந்து 4000 மக்கள் அடங்கிய இந்த சபையில் வளர்ச்சி கருத்துக்களை ஆழமாக விவாதம் செய்யவோ, எல்லா தரப்பு மக்களின் எண்ண ஓட்டத்தை பதிவு செய்யவோ இயலாது. ஆனால் பஞ்சாயத்து பேரவையில் இதற்கான வாய்ப்புகள் அதிகம். இதன் மூலம் நிர்வாகத்தில் சாதாரண மக்களின் பங்கேற்பு உறுதிபடும். பஞ்சாயத்து பேரவை ஓர் சட்ட பூர்வ அமைப்பாக இல்லையென்றாலும் இந்த பேரவை, மக்கள் பங்கேற்பை அதிகப்படுத்த உதவுவதாலும் பேரவையில் எடுக்கப்படும் முடிவுகள், பேரவைக்கூட்டத்தை தொடர்ந்து வரும் கிராம சபையில் தீர்மானிக்கப்படுவதாலும் இந்த அமைப்பு மிகமுக்கியமான மக்கள் மன்றமாக திகழ்ந்து அடித்தள ஜனநாயகத்தை பிரதிபலிக்கக்கூடிய அங்கமாக விளங்கும்.

### 6. பஞ்சாயத்துக் பேரவையின் சிறப்பம்சங்கள்:

- பஞ்சாயத்துப்பேரவை என்பது பற்றி பஞ்சாயத்துச்சட்டத்திலோ அல்லது அரசியலமைப்புச்சரத்திலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே எந்த ஒரே பஞ்சாயத்தும் இதைக்கட்டாயமாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை.

ஆனால் பஞ்சாயத்து அளவில் ஓர் உன்னத ஜனநாயக முறைமையைப் பழக்கப்படுத்தும் நல்ல நோக்கில் இக்கருத்து பரீட்சார்த்தமாக பார்க்கப்படுகிறது.

- இது போன்ற நிகழ்வுகள் நடைபெறும் போது பஞ்சாயத்து அளவில் மக்களிடையே ஒத்த கருத்து உருவாகவும் ஒற்றுமை ஏற்படவும் வழி வகுக்கும்.

- இச்செயலானது பஞ்சாயத்து நிர்வாகத்தில் வெளிப்படையான நிர்வாகம் ஏற்பட வழிவகுக்கும். இதன் மூலம் மக்கள் பங்கேற்பை பஞ்சாயத்து செயல்பாடுகளில் அதிகரித்து தேவையான பணிகளை மக்களுடன் சேர்ந்து மேற்கொள்ளலாம்.

- இது போன்ற நிகழ்வுகள் பஞ்சாயத்து ஆட்சிக்கு பெருமையையும், நன்மதிப்பையும் பெற்றுத்தருவதோடு, அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு அவர்களது பதவிக்குண்டான உண்மையான கௌவரம் கிடைக்க வாய்ப்புள்ளது. இம்முறைகளை செயல்படுத்தும் பஞ்சாயத்துக்கள் முன்னோடி பஞ்சாயத்துக்கள் என்ற பாராட்டினை பெறும்.

- இது போன்ற நல்ல நடைமுறைகள் காலப்போக்கில் அனைத்துப் பஞ்சாயத்துக்களுக்கும் பரவி ஒட்டுமொத்த பஞ்சாயத்துக்களிலும் இது போன்ற நல்ல செயல்பாடுகள் நடை பெற வாய்ப்பாக இருக்கும்.

**7. பேரவைக்கூட்டத்தை நடத்தும் விதம்:**

- பஞ்சாயத்தில் உள்ள பொது இடத்தில் இப்பேரவைக்கூட்டம் நடைபெறும்.

- இக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள், பஞ்சாயத்து தலைவர் இவர்கள் ஒரு பக்கமும், கிராம அளவில் உள்ள பஞ்சாயத் வளர்ச்சிக் குழுவைச் சேர்ந்த பிரமுகர்கள் கிராம வளர்ச்சி மன்றப் பிரதிநிதிகள் அவ்வூரில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற உறுத்தாளர்கள் ஆகியோர் மறுபக்கம் அமர்ந்திருப்பர் (மொத்த உறுப்பினர்கள் சுமார் 60 பேர்)

- இந்த ஒரு சாரார்களது கருத்தை ஒருமுகப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் நாயகமாக ஒரு அனுபவஸ்தர் அமர்ந்து இந்த இரு சாராரது கருத்துக்களையும் முறைப்படுத்தக்கூடிய சபாநாயகர் போன்று பணியாற்றுவார்

- இந்தக் கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய கவுன்சிலர், ஒன்றிய பெருந்தலைவர், உள்ளூர் கிராம நிர்வாக அதிகாரி போன்றவர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்துக் கொள்ளலாம்.

- இந்த ஒட்டு மொத்த நிகழ்வுகளையும் இச்சபையின் நடுவராக இருப்பவர் முறைப்படுத்தினாலும் அவருக்கு உதவுவதற்கு பஞ்சாயத்து திட்டப்பணியாளர்கள் செய்வர்

- இந்தக் கூட்டம் முதல் முறையாக நடப்பதால் ஒருநாள் நடைபெறும் தேவையையொட்டி அனுபவத்தையொட்டி இது 2-3 நாட்களுக்குக் கூட நீடித்துக் கொள்ளலாம்

- இந்தக் கூட்டத்தில் முழுமையான பஞ்சாயத்து திட்டத்தை பஞ்சாயத்தின் செயல் அலுவலர் என்ற முறையில் பஞ்சாயத்து தலைவர் சமர்பிப்பார். அதனைதொடர்ந்து பிற உறுத்தாளர்கள் இத்திட்டம் பற்றிய விளக்கம் கேட்டுப் பெறலாம், சந்தேகங்களை எழுப்பி விளக்கம் பெறலாம், கேள்விகள் கேட்டு விளக்கம் பெறலாம், புதிய யோசனைகளைத் தெரிவிக்கலாம். இது போன்ற நிகழ்வுகள் ஆக்கப்பூர்வமான முறையில் நடைபெறும்

- இக்கூட்டத்தின் இறுதியில் பஞ்சாயத்துத்திட்டமானது நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை .இச்சபை வழங்கும். இதே போன்று 6 மாதங்களுக்கு ஒரு முறை இத்திட்டம் தொடர்பான முன்னேற்றத்தை இதே போன்று சபைகளில் பேசலாம்

**8. கவனத்தில் கொள்ள வேண்டியவைகள்:**

- இக்கூட்டமானது கிராமஅளவில் நிகழ்ந்தாலும், இது போன்ற மக்கள் நிகழ்ச்சிகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பது மிகஅவசியம். இந்த சபைக்கூட்டத்தில் பங்கேற்கும் நிர்வாககுழு மற்றும் மக்கள் உறுப்பினர்கள் தங்கள் ஊர் பற்றி சிந்திக்க கிடைத்த பெரும்பேறாகவும், நல்ல வாய்ப்பாகவும் கருதி தங்களது ஆக்கப்பூர்வமான பங்கை அளிக்க வேண்டும்.

- வீணான பேச்சுக்களை தவிர்த்தல், சொந்த விருப்பு வெறுப்புக்களைத் தவிர்த்தல், கண்ணியத்தைக் கடைப்பிடித்தல், பொறுமையாகவும், ஆக்கப்பூர்வமாகவும் பங்கேற்றல் ஆகியவற்றை பங்கேற்போர் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்

- கூட்டம் முடிந்தவுடன் இந்த கூட்டத்தில் வெளி வந்த கருத்துக்களின் சாரத்தைத் தொகுத்து வழங்கவும் அடுத்த கூட்டம் எப்போது எங்கு நடைபெறும் என்பது குறித்தும் சபாநாயகர் அறிவிப்புக் கொடுத்து தேசீய கீதத்துடன் முடித்து வைக்கலாம்

**9. இறுதியாக...**

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டம், "புதுமைகளின் யுகம்" என கூறப்படுகிறது. எல்லாத் துறைகளிலும் புதுமையும், புத்தாக்கமும் ஆதார சக்தியாக விளங்கி மனித வாழ்க்கையை எளிமை படுத்தி வருகிறது. மனித குலத்திற்கு உதவும் புதுமை நிகழ்வுகளுக்கு வேகம் கொடுத்து உற்சாகப்படுத்த நல்ல அரசு அவசியம். நல்ல அரசு, மக்கள் பெருமளவில் பங்கெடுத்தால் மட்டுமே சாத்தியம். அந்தவகையில், மக்களை பெருமளவில் பங்கெடுக்கச் செய்யும் புதுமை முயற்சியான "பஞ்சாயத்து பேரவை" என்ற அமைப்பானது நேரடி மக்களாட்சியை நிஜத்தில் நனவாக்கும் முக்கிய மைல்கல் என்பதில் ஐயமில்லை!


**மேலும் விபரங்களுக்கு**

தானம் அறக்கட்டளை - பஞ்சாயத்து திட்டம்

மதுரை - 625 016

0452 - 2302526